சார்பு நீதிமன்றம், மதுராந்தகம்

மு.வ.எண்.73/2021

2025ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 12ம் நாள் PW1 தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு 44வது சட்டம் பிரிவு 6(2)ன் படி திரு.தி.கணேஷ், பி.ஏ.,பி.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் திரு. ராஜேந்திரன் த/பெ. சந்திரன் | நாள்.12.08.2025 |
| வயது. 41 | வட்டம் |
| கிராமம். வன்னியநல்லூர் | மாவட்டம். |

**<u>வாதி சாட்சி 1 அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பில் முதல் நிலை விசாரணை செய்யப்படுகிறார்</u>**

1. நான் வழக்கில் வாதி. நான் எனது முதன்மை விசாரணை வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். அதில் கண்டுள்ள சங்கதிகள் நான் சொல்லிதான் எழுதப்பட்டது. அதில் உள்ள கையொப்பங்கள் என்னுடையதுதான். 05.02.2016 தேதியில் எனக்கும், என் சகோதரருக்கும் என் தகப்பனார் எழுதிக் கொடுத்த செட்டில்மென்ட் ஆவணத்தின் இணைவழி நகல் வா.த.சா.ஆ.1. என் சகோதரர் சுரேஷ், எனக்கு எழுதிக் கொடுத்த 12.11.2019 தேதியிட்ட விடுதலை ஆவணத்தின் இணைய வழி நகல் வா.த.சா.ஆ.2. வழக்குச் சொத்திற்கான வீட்டுவரி ரசீதுகள் (எண்ணம் 2) வா.த.சா.ஆ.3. வழக்குச் சொத்திற்கான வில்லங்க சான்றிதழ் நகல்கள் வா.த.சா.ஆ.4. புல எண்.1015/24க்கான கணினி பட்டா நகல் வா.த.சா.ஆ.5. 11.06.2020 தேதியிட்ட செய்யூர் வட்டாட்சியருக்கு நான் அளித்த புகார் நகல் வா.த.சா.ஆ.6. 11.06.2020 தேதியிட்ட செய்யூர் கோட்டாட்சியருக்கு நான் அளித்த புகாரின் கை நகல் வா.த.சா.ஆ.7. நான் வருவாய் வட்டாட்சியருக்கு தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் அனுப்பிய மனு வா.த.சா.ஆ.8. மதுராந்தகம் கோட்டாட்சியர் அனுப்பிய பதில் வா.த.சா.ஆ.9. செய்யூர் வட்டாட்சியருக்கு நான் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் அனுப்பிய மனுவின் கை நகல் வா.த.சா.ஆ.10. செய்யூர்

வட்டாட்சியருக்கு நான் அனுப்பிய மேல் முறையீட்டு மனு நகல் வா.த.சா.ஆ.11. தமிழ்நாடு தகவல் பெறும் ஆணையத்திற்கு நான் அனுப்பிய இரண்டாவது மேல் முறையீட்டு நகல் வா.த.சா.ஆ.12. செய்யூர் சார் பதிவாளருக்கு நான தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் அனுப்பிய மனுவின் கை நகல் வா.த.சா.ஆ.13. அவரிடம் இருந்து பெறப்பட்ட பதில் வா.த.சா.ஆ.14. செய்யூர் வட்டாட்சியர் அளித்த கடிதம், அ.பதிவேடு, சிட்டா மற்றும் அடங்கல் நகல்கள் வா.த.சா.ஆ.15. அரசாணை எண்.318ன் நகல் வா.த.சா.ஆ.16. வில்லங்கச் சான்றிதழ் வா.த.சா.ஆ.17. தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

(பிரதிவாதிகளின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்படுகிறது)